**அக்டோபர் - 13**

**"நான் என் விசுவாசத்தை என் கிரியைகளினாலே உனக்கு காண்பிப்பேன்." - யாக் 2 : 8.**

இப்பொழுது இருக்கிற யுகத்திலுள்ள கர்த்தருடைய பிள்ளைகள் தங்களுடைய கிரியைகளினாலே அல்லாமல், தங்களுடைய விசுவாசத்தினாலே நியாயத்தீர்க்கப்படுகிறார்கள். ஆயினும் கிரியைகளும் தேவைப்படுகின்றன. நம்முடைய கிரியைகளினாலே, நாம் நமது விசுவாசத்தை மெய்பித்துக் காட்டுகிறோம். தேவனுக்கு ஸ்தோத்திரம், அபூர்ணமான கிரியைகள் நம்முடைய நோக்கங்களின் நமது சித்தத்தின் உண்மைப்பற்றை அவருக்கு மெய்பித்துக் காட்டக் கூடும். நம்முடைய கிரியைகள், நம்முடைய விசுவாசத்தின் நேர்மையை கர்த்தருக்கு மெய்பித்துக் காட்டினால், அந்த விசுவாசம் அவருக்கு ஏற்றுக் கொள்ளக் கூடியதாக இருக்கிறது. நாம் பூரணராக எண்ணப்பட்டு ராஜ்யத்தில் ஒரு பங்கும், அவரிடத்தில் வெறும் வார்த்தையினால் மட்டுமல்லாமல், கிரியைகளினாலும் அன்பு கூறுகிறவர்களுக்கு, அதாவது, ஜீவியத்தின் கிரியைகளினால் தங்களுடைய அன்பை அறிவிக்கவும், மெய்பித்துக் காட்டவும், கஷ்டப்பட்டு முயற்சி செய்கிறவர்களுக்கு கர்த்தர் ஒதுக்கி வைத்திருக்கிற மகா மேன்மையும் அருமையான எல்லா காரியங்களும் கொடுக்கப்படும். **- Z ’04, 45 (R 3317)**

அப்படிப்பட்ட ஒரு நம்பிக்கை, விசுவாசத்திற்கு அஸ்திபாரமாக வேண்டியிருந்தாலும், அது, நம்பிக்கையில் புரிந்து கொள்ளக்கூடிய சித்தாந்தங்களில் மாத்திரம் அடங்கியிருக்கவில்லை. அது நம்பப்படுகிற காரியத்தில் முற்றிலுமாக இசைய செய்யப்பட வேண்டும். அதைத் தனது சொந்தமாக்கி அதன் மீது செயல்பட வேண்டும். இப்படிப்பட்ட ஒரு விசுவாசம் ஒருவருடைய எண்ணங்களையும், உபதேசங்களையும், வார்த்தைகளையும், செயல்களையும் ஊக்குவிக்கிற ஒரு ஜீவனுள்ள வல்லமையாய் இருக்கிறது. ஆகையால், ஒரு உண்மையான விசுவாசம் கிரியைகளில் தானே சாட்சி கூறும். எங்கேயாகிலும் இவைகள் இல்லாதிருந்தால், உண்மையான விசுவாசம் இருப்பதும் குறித்து சந்தேகப்படலாம். ஆகையால் நாம் ஒரு பிரகாசிப்பிக்கிற, நீதிமானாக்குகிற, பரிசுத்தமாக்குகிற, விடுதலையளிக்கிற விசுவாசத்தை உடையவர்களாய் இருக்கிறோம் என்பதை ஒத்தக் கிரியைகளினால் மெய்பித்துக் காட்டுவோமாக. ஏனென்றால், கிறிஸ்து இயேசுவால் அன்பினால் ஏவப்பட்டு கிரியைகளை நடப்பிக்கிற ஒரு விசுவாசம் மாத்திரமே பயனுள்ளதாயிருக்கிறது. **- P ’32, 150.**

**ஒத்த வாக்கியங்கள் :-**

**மத் 5:16; 7:16-18,20; யோவா 13:38; 15:5,8; கலா 5:6; யாக் 1:27; 2:17,19-26, 3:13; ஆதி 22:9,12; 15:6; ரோம 4:3; கலா 3:6; 6:9,10; பிலி 2:12,13; தீத் 3:14; எபி 11; 1யோவா 2:6; வெளி 2:19.**

**கோபுர வாசிப்பு : Z ’16, 139 (R 5892).**

**வினாக்கள் : இந்த வாரத்தில் எனது விசுவாசத்தின் உண்மையைக் கிரியைகளினால் சாட்சி கூறினேனா? எப்படி? அவற்றின் பலன் என்ன?**